உங்களனைவருக்கும் இனிய மாலை வணக்கம். சர்வதேச மகளிர் மாதத்தின் முதலாவது நாளில் உஙகளைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்! இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து, தொழிலாளர் படையில் பெண்களைத் தக்கவைத்தல் மற்றும் மீண்டும் உள்வாங்குதல் எனும் முக்கியமான தலைப்பை ஆராய்வதற்காக உங்களுடன் இணைந்து கொள்வதற்கு என்னை அழைத்ததற்கு அமெரிக்க வர்த்தக சம்மேளனத்திற்கும் குறிப்பாக Vraiக்கும் நன்றி கூறுகிறேன். பார்வையாளர்கள் மத்தியில் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருதரப்பினரையும் பார்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் மற்றும் பெண்கள் தரப்பு நியாயங்கள் தொடர்பாகவும் குரலெழுப்புவது பெண்களுக்கு மட்டுமே உரிய விடயம் என நாம் அடிக்கடி தவறாக நினைக்கிறோம் – நிச்சயமாக அவ்வாறில்லை. இது ஒரு பகிரப்பட்ட சவாலாக இருப்பதை உணர்ந்து, இதற்கு பகிரப்பட்ட தீர்வுகளைத் தேடுவதற்கு, தனியார் துறை, கல்வித்துறை, சிவில் சமூகம் மற்றும் அரசாங்கம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் உள்ள இரு பாலினத்தையும் சேர்ந்த நண்பர்களும் செயல்வீரர்களும் எமக்கு அவசியமாகும்.

முதலில், பெண்களின் பொருளாதார வலுவூட்டல் தொடர்பான பின்னணிபற்றி சிறிது பேச விரும்புகிறேன். உலக சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் பெண்களாவர். இருப்பினும் அவர்கள் பொருளாதாரத்தில் முழுமையாகப் பங்கேற்பதில் இடைவிடாத தடைகளை எதிர்கொள்கிறார்கள். உலகளவில், ஆண்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு டொலருக்கும் பெண்கள் 77 சதங்களை மட்டுமே (இன்னும்) சம்பாதிப்பதுடன் குறைந்த ஊதியம் பெறும், குறைந்த திறமை தேவைப்படும் பணிகளில் விகிதாசாரமற்றவகையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள். இது அவர்களின் பொருளாதார வாய்ப்புகளை மட்டுப்படுத்துவது மட்டுமின்றி, தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஒரு தடையாகவும் அமைகிறது.

தற்போது 75 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமையினை சிறிது நோக்குவோம். ஏனெனில் அந்தக் காலப்பகுதியில்தான் இலங்கை சுதந்திரம் பெற்றது. அதுமட்டுமன்றி அந்த ஆண்டுதான் நாங்கள் அமெரிக்க-இலங்கை இராஜதந்திர உறவுகளையும் நிறுவினோம். அந்தக் காலப்பகுதியில் இலங்கையின் நிலைமை தொடர்பான தரவுகள் என்னிடம் இல்லை, எனினும் 1948ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தொழிலாளர் படையில் பெண்களின் பங்கேற்பு 33% ஆக இருந்தது; அந்த எண்ணிக்கை 50 ஆண்டுகளுக்குப் பிறகு கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்தது. இலங்கையில், இன்று அது எத்தனை சதவிகிதம் என உங்களால் ஊகிக்க முடியுமா? 2021 ஆம் ஆண்டில் தொழிலாளர் படையில் 71% சதவிகிதமாக காணப்பட்ட ஆண்களின் பங்கேற்புடன் ஒப்பிடுகையில், பெண்களின் பங்கேற்பு 32% சதவிகிதம் மட்டுமே. எனவே இலங்கையின் இன்றைய புள்ளிவிபரங்கள் 1948 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்த எண்ணிக்கைக்கு சமமாகும். இந்த பாலின இடைவெளியானது ஏற்றுக்கொள்ள முடியாததாகவும், ஆன்மாவை நசுக்குவதாகவும் நியாயமற்றதாகவும் காணப்படுவது மட்டுமன்றி, அது இலங்கையின் பொருளாதாரத்தின் திறனையும் மட்டுப்படுத்துகிறது. சிரேஷ்ட தொழில்கள் மற்றும் தூதுவர் பதவி ஆகியவற்றை இலங்கைப் பெண்கள் வகித்துள்ள போதிலும், Colombo Clubஇன் 152 வருடகால வரலாற்றில் முதன்முறையாக இவ்வருடம் அதன் தலைவராக ஒரு பெண் தெரிவு செய்யப்பட்டுள்ளார், அத்துடன் எங்களது சமீபத்திய பலதரப்பு கூட்டு கடற்படைப் பயிற்சியில் முதன்முறையாக இலங்கை கடற்படையினைச் சேர்ந்த பெண் நீர்மூழ்கி வீராங்கணை ஒருவர் உள்ளடங்கியிருந்தார். பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம், 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 பில்லியன் டொலர்களை சேர்க்க முடியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இலங்கை தனது பொருளாதாரத்தில்

தற்போது 20 பில்லியன் டொலர்களைப் பயன்படுத்த முடியும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

எனவே, பிரச்சனை என்னவென்று நாம் தற்போது தெரிந்து கொண்டோம்; அதைத் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்யலாம்? குழந்தைகளைப் பராமரித்தல், முதியோரைப் பராமரித்தல், பிற அழுத்தங்கள் போன்ற காரணிகள் பெண்கள் தமது தொழிலைத் தொடர்வதற்குத் தடையாக அமையும்போது, திறமையான பெண்களை பணியிடத்தில் தக்கவைப்பது எவ்வாறு? குழந்தை பராமரிப்புத் திட்டங்கள் அல்லது கடன் வசதிகள் மற்றும் நெகிழ்வான பணிநேரங்கள் ஆகியவற்றை நிறுவனங்கள் வழங்கலாம். வீட்டு வேலைகள் மற்றும் குழந்தை பராமரிப்புக் கடமைகள் ஆகியவற்றில் பெரும்பகுதியினை பெண்களே மேற்கொள்ளும் நெறிமுறைகளை நாம் சவாலுக்குட்படுத்தலாம். பதவி உயர்வுகளுக்காகப் போட்டியிடுவதற்கும், மாலை நேரங்களில் மேலதிக நேரம் வேலை செய்வதற்கும் பெண்களுக்கு சம வாய்ப்பு அளிக்கலாம். ஆண்களைப் போலவே பெண்களையும் அவர்கள் செய்யும் நல்ல வேலைக்காக அவர்களைப் பாராட்டி வெகுமதியளிக்கலாம். பெண் சக பணியாளர்கள் சமமாகவோ அல்லது அதிகமாகவோ தகுதி பெற்றவர்களாக இருந்தபோதும் அவர்கள் தவறாக நடத்தப்படுவதையோ அல்லது அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படாமல் இருப்பதையோ நீங்கள் பார்க்கும் போது அதுபற்றி ஆண்களை நாம் பேச வைக்கலாம். உள்ளகப்பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இளம் பெண்கள் மேலும் வளர நாம் உதவலாம். ஒரேயொரு பெண் உறுப்பினரைக் கொண்ட Amcham சபையில் பெண்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கலாம்.

இலங்கையில் உள்ள பெண்கள் தொழிலாளர்படையில் இணைவதற்கும் அதில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கும் தேவையான வளங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான அணுகல்களை அவர்களுக்கு வழங்குவதற்கான முன்முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். முதலாவதாக, பெண் தொழில்முனைவோருக்கு நிதிகளுக்கான அணுகலை அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். ஒரு வணிகத்தைத் தொடங்குவதற்கும் அதை வளர்ப்பதற்கும் மூலதனத்திற்கான அணுகல் மிகமுக்கியமானதாகும், எனினும் நிதியிடல் தொடர்பான விடயங்களில் பெரும்பாலும் தங்களது ஆண் சகாக்களை விட பெண் தொழில்முனைவோர் அதிக தடைகளை எதிர்கொள்கின்றனர். நிதியிடல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எங்கு செல்ல வெண்டும் என்பது தமக்குத் தெரியாதிருப்பதாக பெண் சிறு வணிக உரிமையாளர்கள் நேரடியாக என்னிடம் கூறக்கேட்டிருக்கிறேன். இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக, பெண்களுக்குச் சொந்தமான வணிகங்களுக்கு கடன் வழங்குவதை அதிகரிப்பதற்காக, இலங்கை நிதி நிறுவனங்களுடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றி வருகிறது. பெண் தொழில்முனைவோருக்கு பயிற்சி, நிதியியல் கல்வியறிவு மற்றும் வழிகாட்டல்களை வழங்கும் முன்முயற்சிகளுக்கு நாங்கள் உதவி செய்கிறோம். இலங்கையில் பெண்களை இலக்காகக் கொண்ட முதலாவது வணிக முடுக்கியான AccelerateHer இனை அறிமுகப்படுத்துவதற்காக Hatch Worksஇற்கு நிதி வழங்கியதையிட்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். கொழும்பைச் சுற்றியுள்ள இந்த சந்தைகளில் சிலவற்றிற்கு நான் செல்ல நேர்ந்தபோது போது சந்தித்த பலர், பெருந்தொற்றுக் காலத்தில், தேவை அல்லது சலிப்பு காரணமாகவே, தங்கள் வீடுகளில் இருந்து இணையவழி வணிகத்தைத் தொடங்கியதாக என்னிடம் கூறினர். தற்போது அவை நன்கு வளர்ச்சியடைந்து, தொழில்முனைவில் ஒரு புதிய பாதையினை உருவாக்கியுள்ளன.

இரண்டாவதாக, முறையான பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். இலங்கையில் பெரும்பாலும் சம்பளத்துடன் கூடிய லீவுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற சலுகைகளும் சட்டப் பாதுகாப்புகளும் அற்ற முறைசாரா துறையில் பெண்கள்

விகிதாசாரமற்ற வகையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள். பெண்களுக்குச் சொந்தமான வணிகங்களுக்கு சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் உதவிகளை வழங்கும் முன்முயற்சிகள் உட்பட, பொருளாதாரத்தை முறைப்படுத்துவதை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் உதவிசெய்கிறோம்.

மூன்றாவதாக, பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவோம். பொருளாதார ரீதியிலான பெண்களின் பங்கேற்பு மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கான குறிப்பிடத்தக்க தடைகளாக பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறை என்பன காணப்படுகின்றன. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுடனான பங்காண்மைகள் ஊடாக உட்பட பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடும் முன்முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவி செய்கிறது.

இறுதியாக, பெண்கள் முடிவெடுப்பதையும் அவர்களின் தலைமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். அரச மற்றும் தனியார் துறைகளில் பெண்கள் பெரும்பாலும் தலைமைப் பதவிகளில் குறைவாகவே உள்ளனர். பயிற்சி மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட பெண்கள் முடிவெடுப்பதையும் அவர்களின் தலைமைத்துவத்தையும் மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் முன்முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவி செய்கிறது. செயன்முறைத் திறன்களையும் கருவிகளையும் இலங்கைப் பெண்களுக்கு வழங்குவதற்காக இராஜாங்கத் திணைக்களத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் உலகளாவிய நிகழ்ச்சித்திட்டமான We Connect International இன் பிரதிநிதி இன்று இங்கு எம்முடன் உள்ளார்.

பெண்களுக்கு சமமான பொருளாதார வாய்ப்புகள் இருக்கும்போது, அவர்கள் தமக்கும் தமது குடும்பங்களுக்கும் சிறப்பாக உதவிசெய்ய முடியும். அது பலமான பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களுக்கு வழிவகுக்கிறது. உண்மையில், தலைமைப் பதவிகளில் அதிகமான பெண்களைக் கொண்ட நிறுவனங்கள் அதிக லாபமீட்டும் தன்மை மற்றும் ஒட்டுமொத்த சிறந்த செயற்திறன் ஆகியவற்றைக் கொண்டிருப்பதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எனது தூதரகத்தில், பாதுகாப்பு, கட்டிட நடவடிக்கைகள், கொன்சியுலர் பிரிவு, பொது விவகாரங்கள், அரசியல் பிரிவு மற்றும் Peace Corps உள்ளிட்ட முக்கியப் பிரிவுகளை பெண்கள் தலைமையேற்று வழிநடத்துவதால், பலவிதமான யோசனைகளையும் சிக்கல்களுக்கான சிறப்பான தீர்வுகளையும் எமது சிரேஷ்ட தலைமைத்துவக் குழுவிற்கு முன்வைப்பதற்கு எம்மால் முடிந்துள்ளதாகவே நான் நினைக்கிறேன்.

எனவே பின்வரும் கருத்துக்களுடன் எனது உரையினை நிறைவு செய்கிறேன்: பெண்களின் பொருளாதார வலுவூட்டலை ஊக்குவிப்பதென்பது நாம் மேற்கொள்வதற்குச் சரியான செயல் மாத்திரமன்றி; அது புத்திசாலித்தனமான செயலுமாகும். சனத்தொகையில் அரைப்பகுதியினரின் முழு ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக, இலங்கையானது தனது பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் துரிதப்படுத்தலாம், மற்றும் தனது அனைத்து குடிமக்களது வாழ்க்கையினையும் மேம்படுத்தலாம். கண்டிக்கு அருகிலுள்ள ஒரு பாடசாலையில் இளம் மாணவத் தலைவிகளின் ஒரு குழுவைச் சந்தித்தது இங்கு எனது முதல் வருடத்தின் பிரகாசமான தருணங்களில் ஒன்றாகும். அவர்களின் முகங்களை நான் என்றும் மறக்க மாட்டேன். ஆண் மாணவர்களைப் போலவே தங்களுக்கும் பெரிய கனவுகள் இருப்பதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஆண் மாணவர்களைப் போலவே தாமும் புத்திசாலிகள் என அவர்கள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் கூறியது சரி என நான் அவர்களிடம் கூறினேன்.

எனவே, இன்று இங்குள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் சவால் விடுக்கிறேன். அடுத்த சர்வதேச மகளிர் மாதமான 2024, மார்ச் மாதத்திற்குள், உங்கள் நிறுவனத்தினால் எவற்றையெல்லாம் செய்யலாம், என்ன வகையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நீங்கள் நடைமுறைப்படுத்துவீர்கள், தலைவர்களாகவும் நிறைவேற்று அதிகாரிகளாகவும் நீங்கள் பெண்களை முழுமையாக வலுவூட்டுவதற்கும் திறனுடையவர்களை தக்க வைப்பதற்காகவும் மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய தொனியையும் தராதரங்களையும் எவ்வாறு தாபிப்பீர்கள்? நீங்கள் எதைச் சாதித்தீர்கள் போன்ற விடயங்களைக் கேட்பதற்காக தற்போதிலிருந்து ஒரு வருடத்திற்கு நான் ஆவலுடன் காத்திருப்பேன். நன்றி.